-1-

1799/16

\\System1-pc\f\T3 Section\Drafts\2016\29-16-T3.doc

001859

22/11/16

அனுப்புநர்:

திரு. இரா. கண்ணையா, எம்.ஏ.,
வட்டார வளர்ச்சி அலுவலர் (கிஊ)
வாடிப்பட்டி.

18 NOV 2016

பெறுநர்:

மாவட்ட ஆட்சித் தலைவர்,
மதுரை.

/உரிய வழிமுறையாக /

உதவி இயக்குநர் (ஊராட்சிகள்),
மதுரை

ந.க.எண்: 29/2016/தி3, நாள்: 18.11.2016

பொருள்: வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியம் - காடுபட்டி ஊராட்சி – வடகாடுபட்டி விக்கிரமங்கலம் செல்லும் சாலை குண்டும், குழியுமாக உள்ளதை சரி செய்து தார்ச்சாலை அமைக்க – அனுமதி வழங்கக் கேட்டல் – தொடர்பாக.

பார்வை:

1. சட்டமன்ற உறுப்பினர், சோழவந்தான் சட்டமன்ற தொகுதி அவர்களின் கடிதம் நாள்: 24.06.2016.
2. ஊராட்சி மன்றத்தலைவர், காடுப்பட்டி கடிதம் & தீர்மான நகல்.
3. மாவட்ட வன அலுவலர், மதுரை அவர்களின் கடிதம் நாள்: .10.2016

-----

வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியம், காடுபட்டி ஊராட்சி வடகாடுபட்டியிலிருந்து விக்கிரமங்கலம் செல்லும் சாலை சேதமடைந்து மிகவும் மோசமான நிலையில் உள்ளது. அதனால் பேருந்து போக்குவரத்து நிறுத்தப்பட்டுவிட்டது. சாலை குண்டும் குழியுமாக உள்ளதால், மழைக்காலங்களில் நீர் தேங்கி போக்குவரத்திற்கு பயன்பாடின்றி பல கஷ்டமான சூழ்நிலை உருவாகியுள்ளது.

மேற்படி, சாலையில் வனத்துறைக்கு சொந்தமான இடத்தில் அமைந்திருந்தாலும் 60 ஆண்டுகாலமாக பொதுமக்களின் பயன்பாட்டில் இருந்து வருகிறது. எனவே, வடகாடுபட்டி, விக்கிரமங்கலம் மற்றும் காடுபட்டி கிராம பொதுமக்கள் நலன் கருதி மேற்படி இடத்தில் தார்சாலை அமைக்க வனத்துறையினரின் அனுமதி பெற்று தர உரிய நடவடிக்கை எடுக்கும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

வட்டார வளர்ச்சி அலுவலர் (கிஊ)
வாடிப்பட்டி.

18.11.16

நகல்:

மாவட்ட வன அலுவலர், மதுரை அவர்களுக்கு
அனுப்பப்படுகிறது.